**அவசர நிலைமைகளின் போது தாய்ப்பால் சிசுக்களிற்கு சிறந்த பாதுகாப்பினை வழங்குகிறது.**

**கொழும்பு 31, வைகாசி, 2017:** சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு, உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) மற்றும் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (UNICEF), தற்போதைய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற அவசர நிலைமைகளின் போது சிசுக்களிற்கு தொடர்ச்சியாக தாய்ப்பாலூட்டலின் அவசியம் பற்றியும் மற்றும் தேவையற்ற அதிக தீங்கினை ஏற்படுத்தும் நன்கொடைகள் மற்றும் சிசுக்களிற்கான பால் மா என்பவற்றிற்கெதிராக விழிப்பாக இருக்கும் படியும் சகல தொடர்புடைய கட்சிகளிற்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவசர நிலைமைகளின் போது உணவு வழங்கல் மற்றும் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றக்கொள்வது மிகவும் கடினமாகவுள்ள பாதிக்கப்பட்ட இடங்களில் சிசுக்கள் மற்றும் இளம் குழந்தைகள், வயிற்றோட்டம் மற்றும் வேறு நோய்களிற்கு கூடியளவில் தாக்கத்திற்குள்ளாவார்கள். தாய்ப்பால் முக்கியமான போஷணை மற்றும் நிர்ப்பீடன வலிமையினை சிசுக்களிற்கு வழங்குவதன் மூலம் அவர்களை தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கும். தாய்ப்பாலூட்டப்படாத குழந்தைகள் நோய்களிற்குள்ளாகும் தன்மை குறிப்பிடக்கூடியளவில் உயர்வாக இருக்கின்றது. எனவே பேரழிவினால் பாதிக்கப்பட்ட இடங்களில் பாலூட்டும் தாய்மார்களிடையே தாய்ப்பாலூட்டலினைப் பாதுகாப்பது மற்றும் ஆதரவளிப்பதற்கான முயற்சி எடுக்கப்படல் வேண்டும்.

பேரழிவான காலங்களில் சகல சிசுக்களும் 6 மாதங்கள் வரைக்கும் கட்டாயமாக தாய்ப்பால் மட்டுமே ஊட்டப்பட வேண்டுமென்பதுடன் குழந்தைகளிற்கு இரண்டு வயது வரையும் அதற்கு அப்பாலும் தேசிய வழிகாட்டல்களிற்கமைவாக தாய்ப்பாலுடன், பாதுகாப்பானதும், போதுமானளவிலுமான குறை நிரப்புணவு வழங்கப்படல் வேண்டும். பேரழிவான காலங்களில் சிசுக்களிற்கு பால் மாவினை வழங்குதல் சுலபமான முறையில் அவர்களிற்கு இரட்டிப்பான பேரழிவினை உண்டாக்கும் ஏனெனில் இக்காலங்களில் பால்மாவினை குழந்தைகளிற்கு வழங்குதல் தொடர்ச்சியாக அவர்களிற்கு வயிற்றோட்டத்தினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை இறப்பிற்கு இட்டுச்செல்லும்.

“நாம் தற்போது அவசர நிலைமைளிற்கான தீவிர சவாலினை எதிர்நோக்குகின்றோம் இந்நிலை குழந்தைகளிடையே நோய்களை ஏற்படுத்தி அவர்களை இறப்பிற்கு இட்டுச்செல்லும்” என்று குறிப்பிட்டுள்ளார் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் மாற்று பணிப்பாளர் நாயகம், வைத்தியர் சரத் அமுனுகம அவர்கள்.” சிசுக்கள் மற்றும் குழந்தைகளிற்கு 2 வயது வரை தொடர்ச்சியான தாய்ப்பாலூட்டல் அவர்களுடைய ஆரோக்கியம் மற்றும் நலனுக்கு மிகவும் முக்கியமானது”

தூய நீர், தூய பாத்திரம் மற்றும் சமையல் வசதிகள் அற்ற அவசர நிலைமைகளின் போது பால் மாவினை உபயோகித்து பாலினை தயாரிப்பது கூடுதலான ஆபத்துக்களுடன் தொடர்புடையதென்பதனால் தாய்ப்பாலூட்டப்படாத சிசுக்களிற்கு இது கூடுதலான ஆபத்தினை ஏற்படுத்தும். இந்நிலைமைகளின் போது குழந்தைகளிற்கான பால்மா நன்கொடைகள் சிசுக்களிற்கு தொற்றுக்கள், வயிற்றோட்டம் மற்றும் வேறு வகையான சிக்கல்களை வெளிப்படுத்தும். எனவே அவசர நிலைமைகளின் போது பால்மா வகைகளின் நன்கொடைகள் தவிர்க்கப்படவேண்டும். தாய்மாரை இழந்த சிசுக்களிற்கு தேவையான இடங்களில் சுகாதார, போஷணை மற்றம் சுதேஷ வைத்திய அமைச்சு அல்லது மாகாண/மாவட்ட சுகாதார அதிகாரிகள் போன்றவர்களால் இவை வழங்கப்படும்.

சிசுக்கள் மற்றும் குழந்தைகளிற்கு எவை முக்கியமானது என்ற பார்வையினை தவற விடாததுடன் இவ்வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவின் பின்னரான கடினமான நிலைமைகளின் போது தாய்மார்களை தொடாச்சியான தாய்ப்பாலூட்டலினை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பான குறைநிரப்புணவுகளை வழங்குவது பற்றியும் அவர்களுடைய சூழலில் இதனை வளர்ப்பது முக்கியமானது.

மேலதிக தகவல்களிற்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ளவும்

குடும்ப சுகாதார பணியகம், சுகாதார, போஷணை மற்றும் சுதேஷ வைத்திய அமைச்சு 0112693934/0112699149

Ministry of Health,
Nutrition & Indigenous Medicine

World Health Organization
COUNTRY OFFICE FOR Sri Lanka

unicef